**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 111/2023**

**வாதி தரப்பு சாட்சி–1 ஸ்ரீதரன் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.09.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) பிரதிவாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் 1 வருடத்திற்கு முன்பு தான் வாங்கினார். தற்போது அவர் தான் உரிமையாளர் என்றால் சரிதான். இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாவா சொத்தில் கடை நடத்தி வந்தேன். எனக்கு தெரியாமல் அந்த இடத்தை கிரையம் வாங்கியுள்ளார் அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கிரையம் வாங்கியது தவறு என வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னை காலி செய்யுமாறு மிரட்டியதால் என்னை சட்டப்படி வெளியேற்ற வேண்டுமென வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் தரை தளம் மற்றும் முதல் தளம் உள்ளது என்றால் சரிதான். முதல் தளத்தில் பிரதிவாதி குடியிருக்கிறார் என்றால் சரிதான். தரை தளத்தில் பிரதிவாதி ஒரு கடை வைத்துள்ளாரா என்றால் இல்லை. அருகில் வேறு கட்டிடத்தில் வைத்துள்ளார்.

2) 2022ம் வருடம் ஜுன் மாதம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நான் 2023ல் இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இதே கட்டிடத்தில் கடை நடத்தி வரும் சரோஜா, விஜயலட்சுமி இருவரும் தனித்தனியாக வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். சரோஜா, விஜயலட்சுமி எனக்கு உறவினரா என்றால் இல்லை. சரோஜா, விஜயலட்சுமி இருவரும் இதே பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் தாவா சொத்தில் வாடகைதாரர் என்ற முறையில் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். வழக்கு தாக்கல் செய்த பின்பு பிரதிவாதி தாவா இடத்தை காலி செய்ய வேண்டுமென வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்து தனக்கு சொந்த உபயோகத்திற்கு வேண்டுமென கூறி தான் RLTOP.NO.02/2024 மனுவை எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3) பிரதிவாதிக்கு வாடகை செலுத்தியதற்கான ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் கைபேசி மூலமாக செலுத்தியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், நான் வாடகை செலுத்தவில்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் என்னை சட்ட நடவடிக்கையின் மூலமாக தான் வெளியேற்ற வேண்டுமென பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அதன்படி பிரதிவாதி எனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செயலற்றுபோய்விட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ள இடம் நகரத்தின் மைய பகுதி மற்றும் போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி மாதம் ரூ.15,000/– வாடகை என தனது பதிலுருரையில் கூறியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் விசாரணைக்கு வரும் போதாவது பிரதிவாதியின் பதிலுரை பற்றி தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. சமூகம் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையின் விபரங்கள் எனக்கு முழுவதுமாக தெரியாது என்றால் சரிதான். நான் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**